நாள்.13.03.2025

**அசல் வழக்கு எண். 39/2016**

**பெயர்.பாலசுப்ரமணியன்**

**த.பெ. <u>ராமசந்திரன்</u>**

**<u>பி.வா.சா.2– வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

வாதி தாக்கல் செயத் வ.த.சா.ஆ.12 முதல் வ.த.சா.ஆ.17 ஆவணங்கள் எனது அன்னதான வரவு செலவு புத்தகம் என்றால் சரிதான். அந்த எல்லா புத்தகத்திலும் பந்தல் உதவி அருள் மிகு பொது ஆவுடையார் திருக்கோயில் என்று போடப்பட்டுள்ளது என்றால் சரிதான். கோயில் பந்தல் அன்பளிப்பு செய்கிறேன் என்று சொன்னார்களா என்றால் இல்லை வேறு யாரு சொல்லி கேட்டது என்றால் அந்த கிராமத்தில் 4 பேர் சொல்லி கோயில் நிர்வாகத்தினர் செய்தததது. அந்த 4 பேர் யாரு என்று எதிர் வழக்குரையிலோ, நிருபண வாக்குமூலத்திலோ, சொல்லவில்லை என்று சொன்னால் சரிதான். வ.த.சா.ஆ.12 பக்கம் 30–ல் பேட்ஜ் உபயம் சக்தி ஆப்செட் பிரிண்டரஸ், பட்டுக்கோட்டை என்று கோயில் பெயரினை போட்டு அச்சிட்டு உள்ளேன் என்றால் சரிதான். வ.த.சா.ஆ.12 முதல் வ.த.சா.ஆ.17 ஆவணங்களில் உள்ளவாறு போட்டுள்ளேன் என்றால் ஆமாம் போட்டுள்ளேன். பேட்ஜை அச்சிட கோயில் நிர்வாகம் எனக்கு எந்த அதிகாரமும் கொடுக்கவில்லை என்று சொன்னால் சரிதான். வ.த.சா.ஆ.12 புத்தகத்தில் பக்கம் 31–ல் 9 வது வரிசை எண்ணில் கவர் மற்றும் இரண்டாயிரம் கார்டு வரவு செலவு புக் 1000 பிரிண்ட் ரூ.8150/– (எட்டாயிரத்து நூற்று ஐம்பது) இந்த வரவு செலவு புத்தகமும் யாருடைய அனுமதியின்றி என்னால் அச்சிடப்பட்டது என்றால் சரிதான். அதே பக்கத்தில் வரிசை எண்.10 பிரசாதம் ரூ.36000/– செலவு என்று போடப்பட்டுள்ளதா என்றால் சரிதான். சக்திகளுக்கு பிரசாதம் செலவு ரூ.13564/– அதே வரிசை எண்.13 ஆட்கள் செலவு ரூ.34150/– என்று போடபப்பட்டுள்ளது என்றால் சரிதான். பொங்கல் அன்று அன்னதானம் வழங்கிய செலவு என்று புத்தகத்தில் அச்சிடப்பட்டுள்ள விபரத்திற்கு குறிப்பிட்டு கட்சி செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். வாதி தாக்கல் செய்த புத்தகங்களில் FD interest என்று வரவு காட்டியுள்ளீர்கள் அதற்கான வங்கி வரவு செலவு புத்தகங்களை கோர்ட்டில் தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் கோர்ட் உத்தரவு செய்தால் தாக்கல் செய்வேன். கோவில் நிர்வாகத்தில் நான் எந்த ஒரு பதவியும் வகிக்காமல் பேட்ஜ் பிரசாதம் உருவப்படம் உள்ளீட்டு ஆவணங்களை உற்பத்தி செய்வது சரியா தவறா என்றால் தவறு, கோவிலுக்கான காணிக்கையை எதுவாக இருந்தாலும் பக்தர்களே ஏற்றுக்கொள்ள வேண்டும் கோயில் நிர்வாகத்தில் செய்யவேண்டிய அவசியம் இல்லை என்றால் சரிதான். நான் முறையான கணக்கு வழக்குகள் வைத்திருந்தால் நானே எனது ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருப்பேன் என்றால் போட தவறிவிட்டேன். அன்னதான கமிட்டி நான் கற்பணையாக உருவாக்கி புத்தகத்தை அச்சிட்டுள்ளேன் என்றால் இல்லை. யார் யார் கமிட்டியில் உள்ளார்கள் என்று என்னுடைய பதில் உரையில் சொல்லவில்லை என்றால் சரிதான். வ.த.சா.ஆ.12 பக்கம் 30 ல் பாக்கித்தொகை அன்னதான கமிட்டி மூலம் பட்டுவாடா செய்யப்பட்டு விட்டது என்று கண்டுள்ள விபரம் சரிதானா என்றால் சரிதான். யார் யாருக்கு எப்பொழுது பட்டுவாடா செய்யப்பட்டது என்றால் புத்தகத்தில் உள்ளது. அந்த விபரம்

புத்தகத்தில் இல்லை என்றால் சரிதான். அன்னதான கமிட்டி யார் யார் என்று குறிப்பாக சொல்லமுடியாது என்றால் சரிதான். ஒவ்வொரு வருடமும் என்னால் எவ்வளவு பட்டுவாடா செய்யப்பட்டது என்ற விபரமும் என்னால் சொல்லமுடியாது என்றால் சரிதான். அந்த ஆவணங்களில் அந்த தொகை காட்டப்படவில்லை என்று சொன்னால் 2011ம் ஆண்டு புத்தகத்தில் ரூ.40527/- பாக்கித்தொகை காட்டியுள்ளேன். அது பட்டுவாடா செய்யப்பட்டது. மீதி தொகையை ஏன் பட்டுவாடா செய்துள்ளேன் என்றால் செலவு போக மீதி பணத்தை பணம் கொடுத்தவர்களிடம் திருப்பி கொடுத்துவிட்டேன். கோவிலின் ஒரு பரம்பரை டிரஸ்டி ஆட்சேபணை செய்தும் கோவில் பணத்தை என்னிடம் உபரி பணம் கையில் இருந்தும் ஒவ்வொரு ஆண்டும் முறைகேடாக செலவு செய்துள்ளேன் என்றால் முறைகேடாக செய்யவில்லை. தனிநபர் அன்னதானத்திற்கு கோவில் எந்தவகையிலும் பணத்தை செலவு செய்யவேண்டிய அவசியம் இல்லை என்றால் அது எனக்கு தெரியாது. நானும் நிர்வாக அதிகாரியும் ஒரு பரம்பரை டிரஸ்டியும் சேர்ந்து கோவில் பணத்தை முறைகேடாக செலவு செய்துள்ளோம் என்றால் இல்லை. கோவிலில் ஒவ்வொரு முறையும் நான் நிர்வாகத்தில் உறுப்பினர் போல செயல்பட்டு இந்த விசயங்களை செய்து வருவது தவறு என்றால் இல்லை. நான் முழுமையான வரவு செலவு காட்டவில்லை என்றால் சரியல்ல. முறைகேடாக செலவு செய்த கோவில் பணத்தை மீண்டும் கோவிலுக்கே செலுத்த வேண்டும் அதற்கு கடமை பட்டவர் என்றால் இல்லை.

*Taken down by the typist to my dictation*
*in open Court read over to the*
*witness admitted and acknowledged*
***by him/her to be Correct.***

Tmt.S.Kavipriya,B.A.,L.L.B.,

District Munsif, Pattukkottai.